www.lkedu.lk

யா / கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்

முதலாந் தவணைப்பரீட்சை - 2018

தரம் - 06	தமிழ்மொழியும் இலக்கியமும்	நேரம் : 2 மணித்தியாலம்

சுட்டெண் :- .....

பகுதி I

❖ சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. தந்தை கூறியதைப்பற்றி மகன் யோசிக்கத் தொடங்கினான். மகன் என்பதன் ஒத்த கருத்து சொல்

1) புத்திரன் 2) மகன் 3) சகோதரன் 4) மாதா

02. மகாவலிகங்கை நீண்ட நதி ஆகும். நதி என்பதன் ஒத்த பதம்

1) குளம் 2) சுனை 3) ஆறு 4) ஓடை

03. எனது அம்மா கோபம் கொண்டாவர். இங்கு கோபம் என்பதன் ஒத்த பதம்

1) வெகுளி 2) துன்பம் 3) வெறுப்பு 4) மூர்க்கம்

04. இலங்கை இயற்கை வளம் மிக்கநாடாகும். இங்கு இயற்கை என்பதன் எதிர்ப்பதம்

1) தூய்மை 2) செம்மை 3) இனிமை 4) செயற்கை

05. வகுப்பில் மிகஉயரமான மாணவன் குமரன் இங்கு உயரமான என்பதன் எதிர்ப்பதம்

1) நீளமான 2) மெலிவான 3) கட்டையான 4) அகலமான

06. பாடகனுக்கு பாடகி என்பது போல குறவன் என்பதன் எதிர்ப்பால்

1) குருத்தி 2) குறத்தி 3) குமரி 4) குருபத்தினி

07. நான் பாடத்தை சிரத்தையோடு கற்றேன் இவ்வாக்கியத்தின் பயனிலை

1) நான் 2) பாடத்தை 3) கற்றேன் 4) சிரத்தை

08. கண்டத்தில் இரண்டு கத்தி கொண்ட பறவை எதுவென எலி கூறியது?

1) ஆந்தை 2) கிளி 3) சேவல் 4) பூனை

09. நாங்கள் இயற்கைக் காட்சிகளைக் கண்டு இரசித்தோம் இதில் வந்துள்ள இரசித்தோம் என்பது

1) நிகழ்காலம் 2) எதிர்காலம் 3) கோடைகாலம் 4) இறந்தகாலம்

www.lkedu.lk

10. கந்தன் மரத்தை ஓங்கி வெட்டினான். இதில் வந்துள்ள செயற்படு பொருள்
1) மரம் 2) கந்தன் 3) ஓங்கி 4) வெட்டினான்

11. பின்வருவனவற்றுள் தன்மை பன்மையாக அமையும் சொல்
1) நான் 2) நாம் 3) அவர்கள் 4) அவை

12. முற்றும் துறந்தவர் எனக் குறிப்பிடப்படுபவர்
1) ஞானி 2) ஆத்திகன் 3) நாத்திகன் 4) பிரமச்சரியன்

13. ய், ர், ல், வ், ழ். ள் ஆகிய எழுத்துக்கள் ஆறையும் குறிப்பிடுக.
1) வல்லினம் 2) மெல்லினம் 3) இடையினம் 4) நெடில்

14. மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
1) 12 2) 18 3) 30 4) 216

15. பறவைகள் பலவிதம் எனும் பாட அலகின் ஆசிரியர்
1) செ.கணேசலிங்கம் 2) நவாலியூர் சோமசுந்தரப்புலவர்
3) கோகிலா மகேந்திரன் 4) பேராசிரியர் சோதி

16. உயிர் எழுத்தும், மெய் எழுத்தும் இணையும் போது உருவாகும் எழுத்து
1) உயிர் எழுத்து 2) மெய் எழுத்து
3) உயிர் மெய் எழுத்து 4) ஆய்த எழுத்து

17. ஓர் எழுவாயையும், ஒரு பயனிலையையும் கொண்ட வாக்கியம்
1) கலப்பு வாக்கியம் 2) ஏவல் வாக்கியம்
3) தொடர் வாக்கியம் 4) தனி வாக்கியம்

18. பசுக்கள் புல் மேய்ந்தன. இங்கு பசுக்கள் என்பது
1) பலவின் பால் 2) ஒன்றன்பால் 3) பொதுப்பால் 4) பலர்பால்

19. குயில் கூவும் என்பது போல் ஆந்தை
1) அலறும் 2) கத்தும் 3) கூவும் 4) அகவும்

20. ஐயோ, பாவம் இவன் நல்லவனாயிற்றே இவ்வாக்கியத்தில் இடவேண்டிய நிறுத்த குறியீடு
1) மேற்கோட்டுகுறி 2) முற்றுப்புள்ளி 3) வினாக்குறி 4) வியப்புக்குறி

(1X½ =30 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி II

01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) தமிழ்ப்பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை யாது? அது எவ் அலகில் மேற்கொள்ளப்பட்டது.

2) கணிப்பீடு தொடர்பான தகவல்களை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்?

3) கணிப்பீடு தொடர்பாக ஆசிரியர் கூறிய நியதிகள் எவை?

4) கணிப்பீட்டினால் நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள் 3 தருக.

(12 புள்ளிகள்)

02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

1) நான் விரும்பும் பெரியார்.
2) உடைந்த பேணையின் சுயசரிதை
3) மாலைக்காட்சி
4) கணினியின் பயன்கள்

(18 ள்ளிகள்)

03. உமது பிறந்ததின விழாக் கொண்டாட்டத்திற்கு வருகை தருமாறு உமது மாமனாருக்கு 75 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

04. பின்வரும் சோடிச் சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியங்களில் வைத்து எழுதுக.

1) கரை - .....
   கறை - .....
2) வலி - .....
   வளி - .....
3) ஏரி - .....
   ஏறி - .....

பின்வரும் சொல்லை பெயராகவும் வினையாகவும் வாக்கியம் அமைக்க.

4) படி
   பெயர் - .....
   வினை - .....
5) அலை - .....
   பெயர் - .....
   வினை - .....

(5X2=10 புள்ளிகள்)

www.lkedu.lk

05. சுருக்கமான விடை தருக.

1) செல்வந்தன் ஊர் மக்களுக்கு எவ்வாறு துன்பம் செய்தான்?

2) எலியும், சேவலும் எனும் பாடத்தின் மூலம் பெற்றுக் கொண்ட படிப்பினை யாது?

3) குரங்கின் சேட்டையாகக் கூறப்படும் விடயம் யாது?

4) உடல் வளர்ச்சிக்கு உகந்த ஊட்டச் சத்துக்கள் எவை?

5) பின்வரும் தனிவாக்கியங்களை கூட்டு வாக்கியமாக எழுதுக.

இராமன் வணங்கினான்

சீதை வணங்கினாள்

6) மலேரியாக் காய்ச்சலின் வேறு பெயர் யாது?

7) எச் சந்தர்ப்பத்தில் காகம் வடையைக் கொத்தியது?

8) மோவாஸ் பறவையின் முட்டை ஓடு எதற்குப் பயன்படுகிறது.

9) உயிர் எழுத்துக்கள் எத்தனை? அவற்றை வகைப்படுத்துக.

10) பின்வருவனவற்றுக்கு பொருள் தருக?

1) பிரபஞ்சம்- .....

2) ஒப்பனை - .....

(10X2=20 புள்ளிகள்)

www.lkedu.lk

www.lkedu.lk

யா / கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்

முதலாந் தவணைப்பரீட்சை - 2018

தரம் - 06	கணிதம்	நேரம் : 2.00 மணித்தியாலம்

சுட்டெண் :- .....

பகுதி I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. வட்ட வடிவமான பொருட்கள் இரண்டு தருக.

.....


.....

02. 74509 என்ற எண்ணை இடப்பெறுமானத்தைக் கொண்டு விரித்து எழுதுக.

.....

03. எண்சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்ணை எழுதுக.

.....



04. பத்துமில்லியனுக்கு வழங்கப்படும் பொதுவான வேறுபெயர் எது?

.....

05. சுருக்குக.

325+27 .....

06. சுருக்குக.

570 – 209 .....

07. சுருக்குக.

290X100 .....

08. சுருக்குக.

200 ÷ 8 .....

09. சுருக்குக.

2300 ÷ 1000 .....

www.lkedu.lk

10. 200 மணித்தியாலங்களை நாட்களிலும் மணித்தியாலங்களிலும் தருக.

.....

11. 13:30 மணியை 12 மணித்தியால முறையில் எழுதுக.

.....

12. இன்றைய திகதியை நியம முறையில் எழுதுக.

.....

13. எண் கோட்டின் மீது 3 என்ற எண்ணைக் குறிக்க.

.....

14. பொருத்தமான சமனிலிக்குறியீட்டை இடுக.

$-2 \square 0$

15. – 1 இற்கும் 2 இற்கும் இடையில் உள்ள நிறைவெண்களை எழுதுக.

.....

16. 74 ஐ கிட்டிய பத்தின் மடங்கிற்கு மட்டந்தட்டுக.

.....

17. – 4, 0, – 1, 1 ஆகிய எண்களை ஏறுவரிசைப்படுத்துக.

.....

18.



எவ்வகையான கோணம் என்பதை எழுதுக.

.....

19. கிழக்குத்திசைக்கு எதிரான திசை எது?

.....

20. இரண்டு செங்கோணத்திற்குச் சமனான கோணம் எவ்வகையான கோணம் ஆகும்.

.....

(20X2=40 புள்ளிகள்)

www.lkedu.lk

www.lkedu.lk

பகுதி II

❖ முதலாம் வினாவிற்கும் வேறு நான்கு வினாக்களிற்கும் மொத்தம் ஐந்து வினாக்களிற்கு விடை தருக.

01)

a) 7204562041 என்ற எண்ணை

1) நியம முறையில் எழுதி வலயங்களாக வேறுபடுத்துக.

2) இவ் எண்ணைச் சொற்களில் எழுதுக.

b) 3, 7, 5, 1 என்னும் நான்கு இலக்கங்களையும் ஒரு முறை மட்டும் பயன்படுத்தி எழுதக்கூடிய

1) மிகப்பெரிய எண்ணை எழுதுக. அதில் 5 என்ற இலக்கம் வகை குறிக்கும் பெறுமானத்தை எழுதுக.

2) மிகச்சிறிய எண்ணை எழுதுக. அதில் 5 என்ற இலக்கம் அமையும் இடப்பெறுமானம் யாது?

3) மிகப்பெரிய எண்ணிற்கும் மிகச்சிறிய எண்ணிற்கும் இடையில் உள்ள வித்தியாசம் யாது?

(3+3+4+4+2=16 புள்ளிகள்)

02)

1) சுருக்குகு. 745+3248

2) சுருக்குக. 4025 – 1387

3) பெருக்குக. 172X 26


4) தரம் 6 வகுப்பில் 6 பிரிவுகளிலும் உள்ள மொத்த மானணவர்களின் எண்ணிக்கை 234 ஆகும். இம்மாணவர்களை 6 பிரிவுகளிலும் சமனாகப் பகிர்ந்தால் ஒரு பிரிவில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(3+3+3+2=11 புள்ளிகள்)

03)

1) கோணங்களின் வகைகளை எழுதுக.

2) பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ள a, b, c, d, e, f ஆகிய எழுத்துக்களால் குறிக்கப்படும் கோண வகைகளை எழுதுக.



(5X6=30 புள்ளிகள்)

www.lkedu.lk


04)

◦ பெற்றோல் நிரப்பு நிலையம்	◦ கடை	◦ தபாற்கந்தோர்
◦ கோயில்	◦ பேருந்து தரிப்பிடம்	◦ வைத்தியசாலை
◦ சந்தை	◦ வங்கி	◦ மணிக்கூட்டு கோபுரம்

1) பேருந்து தரிப்பிடத்தில் இருந்து தெற்குத்திசையில் எது அமைந்துள்ளது?
2) கோயிலுக்கு வடக்குத்திசையில் அமைந்திருப்பது எது?
3) தபாற்கந்தோர் பேருந்து தரிப்பிடத்திற்கு எத்திசையில் அமைந்துள்ளது?
4) பேருந்து தரிப்பிடத்திற்கு கிழக்குத்திசையில் அமைந்திருப்பது எது?
5) பெற்றோல் நிரப்பு நிலையம் கடைக்கு எத்திசையில் அமைந்துள்ளது.

(2+2+2+2+3=11 புள்ளிகள்)

05)



1) எண்கோட்டின் மீது 2, -2, -1, 1 ஆகிய எண்களைக் குறிக்க.
2) இவ் எண்களில்
   ய) பெரிய எண் யாது?
   டி) சிறிய எண் யாது?
3) எண்கோட்டில் குறிக்கப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசைப்படுத்துக.
4) − 2 இற்கும் 2 இற்கும் இடையில் உள்ள நிறைவெண்களை எழுதுக.
5) பொருத்தமான சமனிலிக் குறியீடுகளைக் கீறிட்ட இடங்களில் நிரப்புக.
   1) − 3 ☐ 0 2) − 1 ☐ − 3

(4+1+1+1+2+2=11 புள்ளிகள்)

06)

1) 2018 மாசி 26 ஆம் திகதியை சர்வதேச நியம முறைப்படி எழுதுக.
2) நள்ளிரவு 12.00 மணியை சர்வதேச நியம முறைப்படி எழுதுக.
3) 74 மணித்தியாலத்தை நாள், மணித்தியாலங்களில் தருக.
4) கூட்டுக.

நாள்	மணி
7	5
+ 2	14

5) கழிக்க.

மணி	நிமிடம்
5	35
− 3	45

(2+2+3+2+2=11 புள்ளிகள்)

www.lkedu.lk

யா / கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்

முதலாம் தவணைப்பரீட்சை - 2018


தரம் - 06	விஞ்ஞானம்	நேரம் : 2 மணித்தியாலம்

சுட்டெண் :- .....

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. பின்வருவனவற்றுள் வளர்ச்சியைக் காட்டாத பொருள் எது?

1)  2)  3)  4) 

02. பழுதடைந்த பாணில் காணப்படும் நுண்ணங்கி யாது?

1) அமீபா 2) பங்கஸ் 3) வைரஸ் 4) கிளமிடோமோனஸ்

03. சடப்பொருளொன்றில் பின்வரும் இயல்புகள் காணப்பட்டன.

- திட்டமான வடிவம் இல்லை.
- திட்டமான கனவளவு உண்டு.

மேற்குறித்த இயல்புகளை உடைய சடப்பொருள்

1) கல் 2) ஒட்சிசன்வாயு 3) நீர் 4) வளி

04. இடம்பெயர்வைக்காட்டாது அசைவை மட்டும் காட்டும் அங்கி யாது?

1)  2)  3)  4) 

05. உயிரங்கிகளினுள் சக்தி உற்பத்தி செய்யும் செயன்முறை

1) வளர்ச்சி 2) இனப்பெருக்கம் 3) போசணை 4) சுவாசம்

06. ஆய்வுகூடத்தில் தெளிந்த சுண்ணாம்புநீரின் ஊடாக காபனீரொட்சைட் வாயுவைச் செலுத்தும் போது ஏற்படும் நிறமாற்றம் யாது?


1) பால்நிறம் 2) சாம்பல்நிறம் 3) பச்சைநிறம் 4) மஞ்சள்நிறம்

07. கண்டற் சூழலில் வளருகின்ற தாவரமாக அமைவது

1) நாகதாளி 2) கண்ணா 3) எருக்கலை 4) கள்ளி

www.lkedu.lk

08. படத்தில் தரப்பட்ட உபகரணமாக அமைவது



1) கைவில்லை
2) இலத்திரனியல் நுணுக்குக்காட்டி
3) தொலைகாட்டி
4) ஒளிநுணுக்குக்காட்டி

09. தாவர உண்ணியாகக் காணப்படக்கூடிய விலங்கு எது?

1) 
2) 
3) 
4) 

10. வெப்பத்தை பெற்றுக்கொள்ள உதவும் வாயுநிலைச் சடப்பொருளிற்கு உதாரணமாக அமைவது

1) விறகு 2) மண்ணெண்ணெய் 3) பெற்றோல் 4) திரவபெற்றோலிய வாயு

(10X2=20 புள்ளிகள்)

❖ **பின்வரும் கூற்றுக்களில் சரியானதை (√) எனவும் பிழையானதை (X) எனவும் அடையாளமிடுக.**

1) மீன்களின் சுவாச அங்கம் ஈரலிப்பானதோல் ஆகும். ( )
2) தாவரங்கள் தமக்குத்தேவையான உணவைத் தாமே உற்பத்தி செய்யாது. ( )
3) நீரின் திண்மநிலைக்கான உதாரணமாக பனிக்கட்டியைக் கூறலாம். ( )
4) பச்சைத்தாவரங்கள் தற்போசணிகள் ஆகும். ( )
5) கடல்நீர் ஆவியாக்கப்படுவதன் மூலம் கறியுப்பு பெறப்படுகிறது. ( )

(5X2=10 புள்ளிகள்)

❖ **பின்வருவனவற்றை இணைக்குக.**


A	B
தங்கம்	கல்
நாய்	பிறபோசணி
திண்மம்	சுவாசம்
கிணறு	ஆபரணம்
உயிரங்கி	நன்னீர்

(5X2=10 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி II

01) சடப்பொருளின் இயல்புகளில் ஒன்றைப் பரிசோதிப்பதற்காக தரம் 6 மாணவர்கள் மேற்கொண்ட பரிசோதனை அமைப்பு படத்தில் தரப்பட்டுள்ளது.



1) இப்பரிசோதனை அமைப்பு சடப்பொருளின் எவ்வியல்பைக் காட்டுவதற்காக அமைக்கப்பட்டதாகும்?

.....

(2 புள்ளிகள்)

2) A பலூனின் வளியை வெளியேற்றும் போது நீர் பெறும் அவதானம் ஒன்று தருக.

.....

.....

(4 புள்ளிகள்)

3) இவ் அமைப்பில் இருந்து நீர் பெற்றுக்கொள்ளும் முடிவு யாது?

.....

.....

(2 புள்ளிகள்)

4) இப்பரிசோதனையில் பரிசோதித்த சடப்பொருளின் இயல்பைத்தவிர சடப்பொருளிற்கு இருக்கவேண்டிய வேறோர் இயல்பைத் தருக.

.....

.....

(2 புள்ளிகள்)


5) யாதேனும் பொருளில் அடங்கியுள்ள சடப்பொருளின் அளவு எவ்வாறு அழைக்கப்படும்?

.....

(2 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

02) பச்சைத்தாவரங்களில் நடைபெறும் உணவு உற்பத்திச் செயன்முறையைப் படம் காட்டுகிறது.



www.lkedu.lk

1) தாவரங்கள் உணவை உற்பத்திசெய்யும் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்?

.....

(1 புள்ளி)

2) உணவு உற்பத்திச் செயன்முறையின் போது பயன்படுத்தப்படும் ஒளிச்சக்தியை தாவரங்கள் எவ்வாறு பெறுகிறது?

.....

(1 புள்ளி)

3) இவ் உணவு உற்பத்திச் செயன்முறையின் போது வெளிவிடப்படும் வாயு எது?

.....

(2 புள்ளி)

4) படத்தில் காட்டப்பட்ட செயற்பாடு தவிர தாவரங்கள் காட்டும் வேறு இரு சிறப்பியல்புகளைத் தருக.

.....

.....

(2 புள்ளிகள்)

5) உயிரங்கிகளின் சுவாச செயன்முறையின் போது வெளிவிடப்படும் வாயு எது?

.....

(2 புள்ளிகள்)

6) தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் இடையே காணப்படுகின்ற வேறுபாடுகள் 2 தருக.

தாவரங்கள்	விலங்குகள்
1)	.....
.....	.....
2)	.....
.....	.....

(4 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

03) நுண்ணங்கிகளால் மனிதனுக்கு நன்மைகளும் தீமைகளும் ஏற்படுகின்றன.



A



B



C



D

1) நுண்ணங்கிகள் என்றால் என்ன?

.....

(2 புள்ளிகள்)

www.lkedu.lk

2) படத்தில் காட்டப்பட்ட நுண்ணங்கிகள் A, B, C, D யைப் பெயரிடுக.

.....

(4 புள்ளிகள்)

3) நுண்ணங்கிகளால் ஏற்படும் நன்மைகள் இரண்டினைத் தருக.

.....

.....

(2 புள்ளிகள்)

4) நுண்ணங்கிகளால் ஏற்படும் தீமைகள் இரண்டைத் தருக.

.....

.....

(2 புள்ளிகள்)

5) பாண் தயாரிப்பில் உதவும் நுண்ணங்கி யாது?

.....

(2 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

04) எமது சூழலில் உள்ளவற்றை சடப்பொருள் சக்தி என பிரதானமாக இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1) சடப்பொருட்களின் மூன்று நிலைகளும் யாவை?

.....

(3 புள்ளிகள்)

2) சக்திக்கு 2 உதாரணம் தருக.

.....

(1 புள்ளி)

3) சடப்பொருளிற்கும் சக்திக்கும் இடையே காணப்படுகின்ற வேறுபாடுகள் 2 தருக.

சடப்பொருள்	சக்தி
1)	.....
2)	.....

4) திண்ம சடப்பொருட்கள் சில சூழலில் காணப்பட்டன.

செப்பு, பஞ்சு, இறப்பர்நாடா, கண்ணாடி

a) தரப்பட்ட சடப்பொருட்களில் நொருங்கும் இயல்புடையது எது?

.....

b) நீட்டத்தகும், வாட்டத்தகும் இயல்புடையது எது?

.....

www.lkedu.lk

c) மென்மையான இழையமைப்புடைய பொருள் எது?


.....

d) நாம் விசையை வழங்கி இழுக்கும் போது இழுபடக் கூடியதாகவும், விசையை அகற்றியதும் பழையநிலையை அடையக்கூடியதாகவும் இருக்கும் பொருள் எது?

.....

(4 புள்ளிகள்)

5) பின்வரும் அங்கிகளைப் பயன்படுத்தி இணைக்கவர் சுட்டியை அமைக்க



(1X12=12 புள்ளிகள்)

(12X5=60 புள்ளிகள்)

www.lkedu.lk

www.lkedu.lk

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

முதலாம் தவணைப்பரீட்சை - 2018

தரம் - 06	வரலாறு	நேரம் : 2.00 மணித்தியாலம்

சுட்டெண் :- .....

பகுதி I

❖ பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. முற்காலத்தில் வாழ்ந்த மக்கள் பற்றிய தகவல்களை தேடி அறிந்து விளக்குவது.
1) புவியியல் 2) குடியியல் 3) வரலாறு 4) விஞ்ஞானம்

02. புரதான அரச சிம்மாசனம் காணப்படும் அருங்காட்சியகம் எங்கு உள்ளது
1) யாழ்ப்பாணம் 2) கொழும்பு 3) காலி 4) அம்பாந்தோட்டை

03. வரலாறு பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுவது
1) நாணயங்கள் 2) தொல்பொருட்கள் 3) கல்வெட்டுக்கள் 4) மூலாதாரங்கள்

04. தொல்பொருள் மூலாதாரம் எனக் குறிப்பிடப்படுவது இவற்றுள்
1) நூல்கள் 2) கதைகள் 3) மனித எலும்புகள் 4) இலக்கியங்கள்

05. இன்று வரை இலங்கையின் வரலாற்றை தொடர்ச்சியாக அறியும் ஒரே இலக்கிய மூலாதாரம்
1) தீபவம்சம் 2) சூளவம்சம் 3) மகாவம்சம் 4) ராஜவலிய

06. பொலன்னறுவை கல்விகாரையை நிர்மாணித்தவராக கருதுவது
1) 4ம் பராக்கிரமபாகு 2) 2ம் பராக்கிரமபாகு 3) 3ம் பராக்கிரமபாகு 4) 1ம் பராக்கிரமபாகு

07. "கீழைத்தேசங்களின் தானியக் களஞ்சியம்" என அழைக்கப்பட்ட நாடு
1) இந்தியா 2) இலங்கை 3) சீனா 4) உரோம்

08. மின்னேரியாக் குளத்தை கட்டுவித்த மன்னன்
1) தாதுசேனன் 2) வசபன் 3) மகாசேனன் 4) 1ம் பராக்கிரமபாகு

09. மிருகங்களுக்கு முன்னர் தாவரங்கள் தோன்றிய யுகம் எது?
1) பெலியொசொயிக் யுகம் 2) சிலூரியன் யுகம்
3) பெரும்பனியுகம் 4) கேப்பிரியன் யுகம்

www.lkedu.lk

10. கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மூலாதாரம்
1) தீபவம்சம் 2) மகாவம்சம் 3) சூளவம்சம் 4) ராஜாவலிய

11. சாலிவாகன சகாப்தம் என்ற நாட்காட்டியுடன் தொடர்புடைய மதம்
1) இந்து 2) கிறிஸ்தவம் 3) இஸ்லாம் 4) பௌத்தம்

12. பூமி உருவாகிச் சிறிது காலத்திற்கு பின் தோன்றிய கண்ணுக்குத் தெரியாத உயிரினம் எது?
1) புரோகாயோட் பக்டீரியா 2) அல்பா 3) வைரஸ் 4) பங்கசு

13. மனிதனது நிலையை அடைந்த வானரம் எவ்வாறு அழைக்கப்பட்டது
1) நிகாரிகா 2) ஒஸ்ரலோபிதிகஸ் 3) லாவா 4) நெபியுலா

14. கி.மு 2.3 முதல் 1.4 மில்லியன் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதன்
1) ஹோமோ நியாண்டதால் 2) ஹோமோசேபியன்
3) ஹோமோ ஹெபிலஸ் 4) ஹோமோ இரக்ரஸ்

15. மனிதன் முதன்முதலில் நெருப்பைப் பயன்படுத்தியமைக்கான சான்று எங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?
1) இஸ்ரேல் 2) அரேபியா 3) உரோம் 4) பெரகல

16. மிருகங்களை வளர்த்து அவைகளிலிருந்து பால், முட்டை, இறைச்சி என்பனவற்றை பெற்ற காலம்
1) பழைய கற்காலம் 2) புதிய கற்காலம் 3) புராதன கற்காலம் 4) இடைக்கற்காலம்

17. முதன் முதலில் சீனாவில் ஆரம்பமான பயிர்ச்செய்கை எது?
1) நெல் 2) கோதுமை 3) சோளம் 4) குரக்கன்

18. சோளம் முதன் முதலில் பயிரிடப்பட்ட இடம் எது?
1) மத்தியதரைக்கடல 2) இந்தியா 3) மத்திய மெக்சிக்கோ 4) சீனா

19. மகாவம்சத்தை எழுதியவர்
1) மகாபராக்கிரமபாகு 2) தாதுசேனன் 3) வசபன் 4) மகாநாம தேரர்

20. தற்போது வாழும் மனித இனம்
1) ஹோமோ நியாண்டதால் 2) ஹோமோ இரக்ரஸ்
3) ஹோமோசேபியன் 4) ஹோமோஹெபிலஸ்

(20X2=40புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி II

❖ முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடைதருக?

01) A)

i) வரலாறு பாடத்தில் முதலாந்தவணையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை ஒன்று தருக?

ii) இக்கணிப்பீட்டை மேற்கொண்ட பாட அலகு எது எவை?

iii) இக் கணிப்பீட்டினை செய்தமையால் நீர் பெற்ற நன்மைகள் 2 தருக?

(2+2+2=6 புள்ளிகள்)

B) தரப்பட்ட இலங்கைப்படத்தில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்படும் இடங்களை அறிந்து அடைப்புக்குள் எழுதுக.

1) யாழ்ப்பாணம் ( ) 4, காலி ( )

2) கோகர்ண ( ) 5, மகாவலிகங்கை

3) கண்டி ( ) 6, அனுராதபுரம் ( )

(6X1=6புள்ளிகள்)



www.lkedu.lk

02)

1) வரலாறு என்றால் என்ன?
2) வரலாற்றினைக் கற்பதற்குப் பயன்படுத்தப்படும் இரு மூலாதாரங்களின் வகைகளைக் குறிப்பிட்டு உதாரணம் தருக?
3) வரலாற்றினைக் கற்பதன் மூலம் பெறும் பயன்கள் 3 தருக?

(3X4=12புள்ளிகள்)

03)

1) இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் தொல்பொருள் மூலாதாரங்கள் 2 தருக?
2) வரலாற்றுக் காலத்தை அளவிட பயன்படுத்தப்படும் முறைகள் 4 தருக?
3) பின்வரும் ஆண்டில் நிகழ்ந்த நிகழ்வுகளை எழுதுக?

1) கி.மு. 544 ⟶ 2) கி.பி 274 :- 3) கி.பி 1948 :- 4) கி.பி 1 ⟶

(3X4=12புள்ளிகள்)

04)

1) மானிடப் பரிணாமம் என்றால் என்ன?
2) உலகில் வாழும் ஹோமோ சேப்பியன் மனிதனின் நான்கு இனப்பிரிவுகளும் எவை?
3) விவசாய யுகம் தோற்றம் பெற்றதன் மூலம் மனிதன் பெற்றுக்கொண்ட நன்மைகள் 3 தருக?

(3X4=12புள்ளிகள்)

05)

1) மனிதனின் கலாசார வளர்ச்சியின் 3 கட்டங்களைக் குறிப்பிடுக?
2) புதிய கற்காலத்தில் வாழும் மனிதர்கள் எதனை உணவாக உட்கொண்டனர்?
3) இடைக்கற்கால மனிதர்கள் வாழ்க்கை பழக்க வழக்க முறைகள் 3 தருக?

(3X4=12புள்ளிகள்)

06)

1) புதியகற்காலத்தில் பயிரிடப்பட்ட தானிய வகைகள் 3 எவை?
2) மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்தமையால் அடைந்த நன்மைகள் 3 தருக?
3) *A* ⟶ நாம் வாழும் கோள் ⟹

B ⟶ மனிதன் முன்னேற்றம் அல்லது பரிணாமம் அடைந்த யுகம் ⟹

C ⟶ நெருப்பை முதன் முதலில் உபயோகித்தவர் ⟹

D ⟶ பூமி தோன்றிய தூசிப்படலம் அழைக்கப்படும் பெயர் யாது ⟹

(3X4=12புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி I

சுட்டெண் :- .....

❖ சரியான விடையைத் தெரிவு செய்க.

01. இலங்கையின் மிகச்சிறிய நிர்வாகப் பிரிவு எது?
1) மாவட்டம் 2) நகரம் 3) மாகாணம் 4) கிராமம்

02. வடக்கு மாகாணத்தில் காணப்படும் மாவட்டங்களின் எண்ணிக்கை
1) 3 2) 4 3) 5 4) 1

03. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாவட்டங்களை உள்ளடக்கிய நிர்வாகப் பிரிவு எது?
1) மாகாணம் 2) மாவட்டம் 3) கிராமம் 4) நகரம்

04. உமது பாடசாலை எந்த வலயத்தில் அமைந்துள்ளது
1) வலிகாமம் 2) யாழ்வலயம் 3) கிளிநொச்சி 4) கோப்பாய்

05. திசையை அறிந்து கொள்வதற்கு பயன்படுத்தப்படும் கருவி யாது?
1) மழைமானி 2) வெப்பமானி 3) திசையறிகருவி 4) அளிமாமானி

06. வானிலை மூலகம் அல்லாதது எது?
1) வெப்பநிலை 2) மண் 3) காற்று 4) முகில்கள்

07. மில்லி மீற்றர் அலகின் மூலம் எதனை அளவிடுகின்றோம்?
1) இடம் 2) திசை 3) மழைவீழ்ச்சி 4) வெப்பம்

08. இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்களம் அமைந்துள்ள மாவட்டம்
1) கொழும்பு 2) கண்டி 3) அனுராதபுரம் 4) மன்னார்

09. வெப்பநிலையை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் கருவி
1) திசையறிகருவி 2) வெப்பமானி 3) மழைமானி 4) அளிமாமானி

10. உமது பாடசாலை அமைந்துள்ள பிரதேச செயலகம்
1) நல்லூர் 2) யாழ்ப்பாணம் 3) கோப்பாய் 4) உடுவில்

www.lkedu.lk

11. வடமேல் மாகாணத்தில் உள்ளடங்கும் மாவட்டங்கள் எவை?
    1) யாழ்ப்பாணம். மன்னார் 2) பதுளை, நுவரெலியா
    3) காலி, மாத்தறை 4) புத்தளம், குருநாகல்

12. ஆரம்பகாலங்களில் எதனை மையமாகக் கொண்டு திசையை அறிந்து கொண்டனர்?
    1) சூரியன் உதித்தல் 2) சூரியன் மறைதல்
    3) உதித்தலுக்கு எதிரானது 4) மறைதலுக்கு எதிரானது

13. காற்றின் வேகத்தை அளவிட பயன்படுத்தப்படும் கருவி?
    1) காற்றுத் திசைகாட்டி 2) காற்று விசைமானி
    3) மழைமானி 4) வெப்பமானி

14. வெப்பநிலையை அளக்கப் பயன்படும் அலகு எது?
    1) மீற்றர் 2) கிராம் 3) செல்சியஸ் 4) மில்லிமீற்றர்

15. பயிர்களை நாசம் செய்யும் நத்தைகளை அழிக்கும் பறவை எது?
    1) காகம் 2) கிளி 3) வெளவால் 4) செண்பகம்

16. இயற்கை அனர்த்தங்கள் "அல்லாதது"எது?
    1) சூறாவளி 2) வாகன விபத்துக்கள்
    3) சுனாமி 4) இடி, மின்னல்

17. அதிவேகமான காற்றுடன் பெய்யும் மழை?
    1) சூறாவளி மழை 2) வடகீழ்ப் பருவக்காற்று மழை
    3) உகைப்பு மழை 4) தென்மேல் பருவக்காற்று மழை

18. மனிதனால் உருவாக்கப்பட்ட புவிமேற்பரப்பு அம்சம் எது?
    1) கட்டடங்கள் 2) ஆறுகள் 3) மழை 4) அருவிகள்

19. இலங்கையின் மாகாணங்கள் எத்தனை?
    1) பத்து 2) ஒன்பது 3) எட்டு 4) ஏழ

20. உமது பாடசாலை அமைந்துள்ள கிராமசேவகர் பிரிவு இலக்கம் எது?
    1) J/121 2) J/127 3) J/140 4) J/129

(20X2=40 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி II

❖ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

01.

i) முதலாம் தவணையில் புவியியல் பாடத்தில் உம்மால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு ஒன்று தருக.

ii) அதனை எப்பாட அலகில் மேற்கொண்டீர்?

iii) நீர் மேற்கொண்ட கணிப்பீட்டின் மூலம் பெற்ற நன்மைகள் 2 தருக?

iv) இக் கணிப்பீட்டிற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் எவை?

(4X3=12 புள்ளிகள்)

02. தரப்பட்ட இலங்கைப்படத்தில் 1 – 12 வரை இலக்கமிடப்பட்ட மாவட்டங்களைக் குறிப்பிடுக.

(12X1=12 புள்ளிகள்)

03.

i) இலங்கையின் நிர்வாகப் பிரிவினை கிராமித்திலிருந்து வரைந்து காட்டுக.

ii) எண் திசைகளையும் வரைபடம் மூலம் காட்டுக.

iii) புவிமேற்பரப்பு அம்சங்களை 2 ஆக பாகுபடுத்துக.

iv) பௌதிக நிலவுருவங்கள் 3 தருக?

(4X3=12 புள்ளிகள்)

04.

i) வானிலை மூலக்கூறுகள் 3 தருக?

ii) இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்களம்எந்த மாவட்டத்தில் எங்கே அமைந்துள்ளது?

iii) வானிலை பற்றிய அறிவை அறிந்திருப்பதால் ஏற்படும் நன்மைகள் 3 தருக?

(4X3=12 புள்ளிகள்)

05.


i) இடம்பெயரும் பறவை என்றால் என்ன? உதாரணம் 3 தருக?

ii) தாவரங்களினால் எமக்குக் கிடைக்கும் பயன்கள் 4 தருக?

iii) மனிதனுக்கு நன்மை செய்யும் விலங்கு 2 ஐயும் எவ்வகையான நன்மை என்பதனையும் குறிப்பிடுக?

(4X3=12 புள்ளிகள்)

www.lkedu.lk



www.lkedu.lk

www.lkedu.lk

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

முதலாம் தவணைப்பரீட்சை - 2018

தரம் - 06	சுகாதாரமும் உடற்கல்வியும்	நேரம் : 2 மணித்தியாலம்

சுட்டெண் :- .....

பகுதி I

01. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அடைப்புக்குள் குறிப்பிடுக.

1) ஆரோக்கியமான வாழ்வு சுகமான வாழ்க்கைக்கு உகந்தது. ( )
2) நோய் எதிர்ப்புச் சக்தி ஆரோக்கிய வாழ்வின் இலச்சணங்களில் ஒன்றாகும். ( )
3) எமது மகிழ்ச்சிக்குத் தடையாகவுள்ள காரணிகளை நாம் நீக்குதல் கூடாது. ( )
4) உணவை அளவில் குறைத்து உண்பதால் மிகையூட்ட நிலை ஏற்படுகிறது. ( )
5) சுத்தமான வளியைச் சுவாசித்தல் ஆரோக்கிய வாழ்வின் அம்சங்களில் ஒன்றாகும். ( )
6) உமது உடற்றிணிவுச் சுட்டியைக் கணிப்பதற்கு உடல் நிறை இருந்தால் மட்டும் போதுமானதாகும். ( )
7) சமூகநல நன்னிலை ஆரோக்கியத்தின் பண்புகளில் ஒன்றாகும். ( )
8) உடற்றிணிவுச் சுட்டி அட்டவணையில் பச்சை நிறத்தால் குறித்துக் காட்டப்படுவது சாதாரண நிறையை ஆகும். ( )
9) ஆன்மீக நலம் உள்ள ஒருவரிடம் மரியாதை செலுத்தும் பண்பு காணப்படமாட்டாது. ( )
10) குழுவாகச் செயற்படுதல் மூலம் சமூக ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்ளலாம். ( )

(10X2=20 புள்ளிகள்)

02. தொடர்புபடுத்துக.

A	B
1) சமூக ஆரோக்கியம்	மாணவர் திறமை
2) நேர முகாமைத்துவம்	சுறுசுறுப்பு
3) போசணை மட்டம்	உள ஆரோக்கியம்
4) ஆக்க சிந்தனை	பரிவுணர்வு
5) உடலாரோக்கியம்	மிகையூட்டம்

(5X2=10 புள்ளிகள்)

www.lkedu.lk

03. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

1 – 2 ℓ, பிரகாசமான ஒளி, தராசு, முத்திரை சேகரித்தல், அளவுநாடா, நன்றியுடன், கருணை, மகிழ்ச்சியாக இருப்பது, 5 – 4 ℓ , தசைகள், தியானம், ஓய்வும் உறக்கமும்.

1) ..... உளச்சுகாதாரத்தின் மிக முக்கியமான அம்சமாகும்.
2) தரம் 6 மாணவர்களாகிய நீங்கள் நாள் ஒன்றிற்கு ..... நீரை அருந்த வேண்டும்.
3) சிறந்த சுற்றாடலில் ..... அமைவதும் ஒரு இலட்சணமாகும்.
4) விளையாட்டின் மூலம் ..... பலமடையும்.
5) இடுப்புச் சுற்றளவை அளப்பதற்கு ..... பயன்படுத்தப்படும்.
6) ..... ஓர் பொழுது போக்கான அம்சமாகும்.
7) ..... செய்வதன் மூலம் உள நெருக்கீட்டைக் குறைத்துக் கொள்ளலாம்.
8) நமக்கு உதவிகள் செய்பவர்களுக்கு ..... இருத்தல் வேண்டும்.
9) நாம் உயிர்களிடத்தில் ..... காட்ட வேண்டும்.
10) சிறந்த உடல் நலத்தைப் பேணுவதற்கு ..... அவசியம்.

(10X2=20 புள்ளிகள்)

பகுதி II

❖ எல்லா வினாக்களிற்கும் விடை தருக.

1) சுகாதாரம் அல்லது ஆரோக்கியம் என்றால் என்ன?

.....

2) ஒருவரின் மகிழ்ச்சிக்குத் தடையாக இருக்கும் விடயங்கள் 5 தருக.

.....
.....
.....
.....
.....

3) சுகமாக வாழ்வதால் கிடைக்கும் நன்மைகள் 5 தருக.

.....
.....
.....
.....
.....

www.lkedu.lk

4) உயர் போசணையை நாம் வேறு எவ்வாறு அழைக்கலாம்?

.....

5) புரதம் அதிகளவு காணப்படும் உணவுகள் 2 தருக.

.....

.....

6) பந்துடன் விளையாடும் விளையாட்டு 5 தருக.

.....

.....

.....

.....

.....

7) விளையாட்டில் ஈடுபடுவதால் கிடைக்கும் நன்மைகள் 3 தருக?

.....

.....

.....

8) இல்ல மெய்வல்லுநர் போட்டியில் நடாத்தப்படும் விளையாட்டுக்கள் 2 தருக.

.....

.....

9) பாடசாலைக்கு வருமுன் நாம் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் 5 தருக.

.....

.....

.....

.....

.....

10) WASH என்ற நீர் தொடர்பான எண்ணக்கருவின் விரிவாக்கத்தைக் குறிப்பிடுக.

WA - .....

S - .....

H - .....

(5X10=50 புள்ளிகள்)

www.lkedu.lk

www.lkedu.lk

www.lkedu.lk

யா / கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்

முதலாந் தவணைப்பரீட்சை - 2018

தரம் - 06	குடியியற்கல்வி	நேரம் : 2 மணித்தியாலம்

சுட்டெண் :- .....

பகுதி I

❖ 1 – 20 வரையான வினாக்களிற்கு மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக?

01. பாடசாலை பற்றிய தகவல்களை அறிய உதவும் மிக முக்கியமான ஆவணம் எது?
1) சஞ்சிகை 2) சம்பவத்திரட்டுப்புத்தகம்
3) தினவரவுப்பதிவேடு 4) பத்திரிகைகள்

02. கல்வியை வழங்குவதும் நல்ல பிரஜைகளை உருவாக்கத்திற்கும் சிறந்த இடமாக அமைவது?
1) கோயில் 2) குடும்பம் 3) பாடசாலை 4) சமூகம்

03. நற்பிரஜை ஒருவரிடம் காணப்படும் குணவியல்புகளாக அமைவது
1) நேர்மை, பொறுமை 2) நேர்மை, பொறாமை
3) சுயநலம், பொதுநலம் 4) கருணை, கோபம்

04. நீங்கள் பாடசாலை சேர்ந்த திகதியை உறுதி செய்வது?
1) ஆசிரியரிடமிருந்து 2) மாணவர் சேர்வு இடப்பிரிவிலிருந்து
3) பிறப்புச் சான்றிதழிலிருந்து 4) பெற்றோரிடமிருந்து

05. பரீட்சையில் சித்தியடைந்த ஒருவரிடம் தோன்றும் மன எழுச்சியாக அமைவது
1) பயம் 2) கோபம் 3) கவலை 4) மகிழ்ச்சி

06. பாடசாலை விளையாட்டுப் போட்டியில் முதலில் ஏற்றப்படும் கொடி?
1) பாடசாலை கொடி 2) இல்லக் கொடி
3) தேசியக் கொடி 4) சாரணர் கொடி

07. பெற்றோர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வலயக்கல்வி உறுப்பினரின் பங்குபற்றலுடன் உருவாக்கப்பட்ட அமைப்பு?
1) பாடசாலை அபிவிருத்திச்சங்கம் 2) பழைய மாணவர் சங்கம்
3) ஆசிரியர் சங்கம் 4) மாணவர் பாராளுமன்றம்

08. கல்விசாரா ஊழியராக கருதப்படுபவர்
1) அதிபர் 2) அலுவலக உதவியாளர் 3) வகுப்பாசிரியர் 4) பகுதித்தலைவர்

www.lkedu.lk

09. கல்விச் செயற்பாடுகளின் தலைவராக செயற்படுபவர்?
1) ஆசிரியர் 2) மாணவர் 3) அதிபர் 4) கல்விசாரா ஊழியர்கள்

10. இலவசக் கல்வியின் தந்தை எனப்போற்றப்படுபவர்?
1) கலாநிதி C.W.W கன்னங்கர 2) D.S சேனனாயக்க
3) கலாநிதி அப்துல்கலாம் 4) பேராசிரியர் சேனகபிபிலே

11. அரசு ஒசல நிலையங்களை நிர்மானித்த பேராசிரியர் சேனக பிபிலே பிறந்த ஆண்டு?
1) 1920 2) 1930 3) 1932 4) 1934

12. திட்டமிடாது செயற்படும் மாணவனின் இலட்சணங்களில் ஒன்று?
1) முறையாகச் செயற்படுவார்.
2) நேரத்தை உச்ச முறையில் பயன்படுத்துவார்.
3) உள நெருக்கீடு இன்றி செயற்படுவார்.
4) அத்தியாவசியமான நடவடிக்கைகளை கைவிடுவார்.

13. பாடசாலையில் காணப்படும் சட்டதிட்டங்கள்? சம்பிரதாயங்கள் பழக்கவழக்கங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
1) பாடசாலை ஒழுக்கம் 2) பாடசாலை இலச்சினை
3) பாடசாலைக் கலாசாரம் 4) பாடசாலை வரலாறு

14. மாணவர்களினது வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதற்கு முன்மாதிரியாக அமையும் இலச்சினை?
1) பாடசாலை இலச்சினை 2) மகுடவாசகம்
3) பாடசாலைக்கொடி 4) பாடசாலைக்கீதம்

15. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்றுவரை காணப்படும் மாற்றங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
1) பாடசாலை ஒழுங்கமைப்பு 2) பாடசாலை சட்டதிட்டங்கள்
3) பாடசாலை மாற்றங்கள் 4) பாடசாலை வரலாறு

16. உமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்?
1) கொக்குவில் 2) யாழ்ப்பாணம் 3) வவுனியா 4) மன்னார்

17. பிறரிடம் நீர் அவதானிக்க கூடிய பலவீனங்களில் ஒன்று?
1) மகிழ்ச்சியாக இருத்தல் 2) உண்மை பேசுதல்
3) கோபப்படுதல் 4) பொறுமையாக இருத்தல்

www.lkedu.lk

18. பாடசாலை மூலம் சமூகத்திற்கு ஆற்றப்படும் சேவைகளில் ஒன்று?

1) பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

2) பாடசாலை சொத்துக்களை பாதுகாத்தல்.

3) எதிர் காலத்திற்கான நல்ல தலைவர்களை உருவாக்குதல்.

4) பாடசாலை வைபவங்களில் பங்கேற்றல்.

19. சிறுவர்களது அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்ற பாடசாலை?

1) சிறவர் பாடசாலை
2) பிள்ளை நேயப்பாடசாலை
3) ஆரம்பப்பாடசாலை
4) இடை நிலைப்பாடசாலை

20. ஆசிரியர்களுக்கு கீழ்படிந்து நடத்தல் உமது?

1) கடமை ஆகும் 2) உரிமை ஆகும் 3) பொறுப்பு ஆகும் 4) பண்பு ஆகும்

(20X2=40 புள்ளிகள்)

www.lkedu.lk

www.lkedu.lk

பகுதி II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01)

1) இந்தத் தவணையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகையையும் பாட அலகினையும் தருக?
2) அக்கணிப்பீட்டினை மேற்கொள்வதற்கு ஆதாரமாக உள்ள தரவுகள் எவை?
3) இக்கணிப்பீட்டினை மேற்கொண்டமையால் நீர் அடைந்த பயன்கள் 3 தருக?

(12 புள்ளிகள்)

02)

1) பாடசாலை ஒழுங்கமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் பிரதான நபர்கள் யாவர்?
2) பாடசாலை மாணவர்களின் கடமைகள் 3 தருக?
3) பாடசாலை ஒழுங்கமைப்பினுள் இடம் பெறும் ஒழுக்காற்றுக்குழுக்களின் செயற்பாடுகள் 3 தருக?
4) சுயவிபரக்கோவை ஒன்றினுள் உள்ளடங்கும் விடயங்கள் 6 தருக?

(12 புள்ளிகள்)

03)

1) உங்களிடம் காணப்படுகின்ற மற்றவர்களை கவரும் நற்பண்புகள் 3 தருக?
2) கலாநிதி C.W.W கன்னங்கரா அவர்களின் கல்விச் செயற்பாடு தொழில் ரீதியான திறமைகள் 4 தருக?
3) தனிமனித திறமைகளை அதிகரித்துக் கொள்வதற்கு பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் 3 தருக?
4) ஒருவர் தனது பலவீனங்களைக் குறைத்துக்கொள்ள பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எவை?

(12 புள்ளிகள்)

04)

1) பேராசிரியர் சேனகபிபிலே அறிமுகப்படுத்திய கொள்கை எது?
அக்கொள்கை எந்நோக்கத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டது?
